# பாரதிதாசன் கவிதைகளில் கைம்மை

**முனைவர் ஆ. இராஜாத்தி**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

பெண் கல்வியை உணர்த்தியவர் மாயூரம் வேதநாயகர், பெண்ணின் பெருமையைப் பறைசாற்றியவர் திரு.வி.கலியாணசுந்தரனார், பெண்ணின் முன்னேற்றம் குறித்துப் பாடியவர் பாரதியார் எனில், பெண்ணின் கைம்மைக் கொடுமைகளை எடுத்துரைத்தவர் பாரதிதாசன் என்பதே பொருத்தமான ஒன்றாகும். தமிழ் இலக்கியத்தில் தமிழ் அறிஞர்களும் கவிஞர்களும் அவரவர் நோக்கில் பெண்களுக்கான நிலைப்பாட்டினை எடுத்துரைக்க அச்சப்பட்டதில்லை என்பதற்கு அவரவரின் படைப்புகளே சான்றாக விளங்குகின்றன. பாரதியின் கவிதை வழி வந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். இவர் ‘பெண்’ ஒருநாள் முழுவதும் குடும்பத்தில் செய்யும் பணிகளை ‘குடும்ப விளக்கு’நூலில் எடுத்துரைக்கின்றார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை ‘இருண்டவீடு’ என்னும் கதைப்பாட்டில் குறிப்பிடுகிறார். தாம் வாழ்ந்த காலத்தில் தமிழ்ச் சமுதாயப் பெண்களின் நிலையினையும் பெண்ணின் தேவைகளையும் கவிதைகளாகக் காதலைத் தீய்த்தகட்டுப்பாடு, கைம்மைப் பழி, கைம்மைக் கொடுமை, கைம்பெண் நிலை, இறந்தவன்மேற் பழி, கைம்மைத் துயர், கைம்மைநீக்கம் போன்ற தலைப்புகளில் பெண்கள் அடையும் கைம்மைத் துயரங்களாகக் கூறுகின்றார்.

மனிதப்பிறவியாக உள்ள ஆணும் பெண்ணும் இயற்கைத் தத்துவத்திலும், சமுதாய வாழ்க்கைத் தன்மையிலும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர்கள் அல்லர். உடல் அமைப்பில் ஆணும் பெண்ணும் வேறுபட்டவர்களே. இதைமறுக்க இயலாது. ஆனால், அறிவுத்திறனிலோ, வீரத்திலோ வேறுபாடு காண இயலாது என்று கூற முடியும். ஆண்களிலும் சரி, பெண்களிலும் சரி அறிவாளிகளும் ஆண்மையுடையோரும் அறிவிலிகளும், பேடிகளும் கலந்தே காணப்படுகின்றனர். இவ்வாறு இருக்கும் நிலையில் காலங்காலமாக ஆண்கள் பெண்களை ஒடுக்கியும், தாழ்த்தியும், இழிவுபடுத்தியும் நடத்திவந்துள்ளனர். பெண்கள் சமுதாயம் கடந்துவந்த வரலாற்றை நோக்குகிறபோது இக்கருத்துக்கு சரியானவிடையைக் காணமுடிகிறது.

பெண்களுக்குஎதிரான அடக்குமுறைகள் வேதகாலத்திலோ, சங்ககாலத்திலோ மிகப் பெரியஅளவில் நிகழவில்லை என்பதும் உண்மையே. மாறாக ஒருசில வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. ஆனால்,சங்ககாலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையேயுள்ள இடைப்பட்டக்காலத்தில் பெண்களுக்கான அடக்குமுறைகள் மிகுதியாக வழங்கப்பட்டுவந்துள்ளன. குறிப்பாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை கணவனைப் பறிகொடுத்த பெண்மணிகளைக் கணவனுடன் வைத்துக் கொளுத்திச் சாம்பலாக்கிவிடுதல் வழக்கமாயிருந்தது. இக்கொடியவழக்கத்தை அப்போது நம் நாட்டை ஆண்ட சிலவெளிநாட்டுக்காரர்களும் இங்குள்ள அறிவார்ந்த மனித நேயமுடையவர்களும் பெரும் முயற்சிசெய்து அக்கொடியவழக்கத்தை மாற்றினர். அக்காலத்தில் ஆங்கிலேய வணிகக் கூட்டத் தலைவராயிருந்த வாரன்ஹேஸ்டிங், சுவாமி தயானந்தசரஸ்வதி, இராஜா ராம் மோகன் ராய் போன்றோர் சதி என்னும் கொடுமையை ஒழிக்கப் பாடுபட்டுள்ளனர். அதன் பயனாகவே‘சதி’என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பெற்றது. ஆனால்,சதி என்னும் வழக்கம் ஒழிந்தவுடன் பெண்கள் எல்லோரும் சுதந்திரத்துடன் தன் விருப்பத்தின் படி சுயமரியாதையுடன் வாழ்ந்தனரா? என்றால் அதுதான் இல்லை. அதற்குப் பதிலாக வேறுபல வழக்க முறைகளை இச்சமுதாயம் வழங்கியுள்ளது. இந்நிலையில் கணவனை இழந்த பெண்ணை விதவை என்றனர். இந்தக் கோலம் எப்படி இருந்திருக்கும் எனில் உடன்கட்டை ஏறுதல் என்பது ஒருநாள் வலி எனில், விதவையாக வாழ்வது காலத்துக்கும் வேதனை தரும் நிலையாகும். பெண்கள் மறுமணம் என்பதைத் தம் வாழ்நாளில் நினைத்துக் கூட பார்க்கக் கூடாது.

பூ,பொட்டு,தாலி இழந்து,மொட்டையடிக்கப்பட்டு, வெள்ளைச்சேலை உடுத்திவீட்டில் முடங்கிக் கிடக்கும் நிலைஉருவானது. இயற்கை உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வாழவேண்டுமெனக் கட்டுப்பாடுகளை விதித்தனர். தமிழ்ச் சமுதாயத்தில் இந்துசமயம் பெண்களை இவ்வாறு நடத்தியிருப்பதை உணரமுடிகிறது. பாரதிதாசன் கவிதைகளில் கூறப்பெற்றுள்ள கைம்மைக் கருத்துக்கள் இங்கு ஆராயப்பெறவுள்ளன.

**காதலைத் தீய்த்தகட்டுப்பாடு**

'காதலைத் தீய்த்த கட்டுப்பாடு' என்ற கவிதையில் ஆண்களின் மனதைப் புரிந்துகொண்ட சமுதாயம் பெண்களின் மனதை ஏன் புரிந்து கொள்ளாமல் விட்டனர் என்ற கருத்தினை

**ஆடவரின் காதலுக்கும், பெண்கள் கூட்டம்**
**அடைகின்ற காதலுக்கும் மாற்ற முண்டோ?**
**பேடகன்ற அன்றிலைப் போல,மனைவி செத்தால்**
**பெருங்கிழவன் காதல் செய்ய பெண் கேட்கின்றான்!**
**வாடாதபூப் போன்ற மங்கை நல்லாள்**
**மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ?**
**பாடாத தேனீக்கள், உலவாத் தென்றல்,**
**பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?**

என்று கூறுகின்றார். ஆணுக்கு வயதான காலத்திலும் மனைவி இறந்து விட்டால்,மறுமணம் செய்துகொள்ள சமுதாயம் உரிமை கொடுத்துள்ளது. ஆனால் இளம் வயதிலே கணவனை இழந்துவிட்டால் பெண்ணுக்கு மறுமணம் என்பது மறுக்கப்பட்டிருக்கிறது. இக்கருத்தினையே பாரதிதாசன் பெண் மறுமணம் செய்வது தீமையோ? என வினவுகிறார். உயிரோடு இருந்துகொண்டு உணர்வுகளை எப்படிசாகடிக்க முடியும்? பாடாததேனீ உண்டா? தென்றல் வீசாமல் இருக்குமா? வயிறுபசிக்காமல் இருக்குமா? என்றுவெட்ட வெளிச்சமிடுவதை உணரமுடிகிறது. சமத்துவம் இல்லாத சமுதாயச் சூழலினை இக்கவிதைக் காட்டுகிறது. ஆணுக்கு ஒருநீதி, பெண்ணுக்குஒருநீதி நிகழ்ந்திருக்கின்றது என்பதையே கவிஞர் எடுத்துக்காட்டியுள்ளார். .இயற்கையில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு தன்மையும் பண்பும் உண்டு. அதனைத் தடுக்கவோ மாற்றவோ செய்யாமல் அதனை அவற்றின் வழியில் செயல்பட விடுவதே நல்லதாகும்.

**கைம்மைப் பழி**

'கைம்மை' என்றசொல் பெண்ணுக்கு மட்டும் சூட்டப்பட்ட பெயராகத்தான் உள்ளது. மொழி கடவுளின் படைப்பன்று. அது மனிதர்களால் உருவாக்கப்பெற்றது. காலந்தோறும் வளர்த்தெடுக்கப்படுவது. ஆணாதிக்க சமுதாயம் தன் தேவைக்கு ஏற்ப வளர்த்துள்ளது. குழந்தை இல்லை என்றால் 'மலடி' எனவும் கணவனுடன் சேர்ந்து வாழவில்லை எனில் 'வாழாவெட்டி' எனவும் கணவனை இழந்தால் 'கைம்பெண்' எனவும் அழைக்கப்படுகின்றனர். இக்கைம்மை நிலையை வேரில் பழுத்துக் கிடக்கும் பலாவினோடு ஒப்பிடுவதைப் பார்க்கமுடிகிறது.

**கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு**
**வேரிற் பழுத்தபலா - மிகக்**
**கொடியதென்று எண்ணிடப் பட்டதண்ணே குளிர்**
**வடிகின்ற வட்டநிலா**

கோரிக்கையற்றுக் கிடக்கிறது பெண்களின் நிலை என்று கவிஞர் குறிப்பிடுகிறார். அடக்கப்படுகிறபோது பெண்கள் அடங்கியே சென்றுள்ளனர். தன் நிலைக்கு தன்னையே நொந்துகொண்டனரே தவிர, சமுதாயத்தில் தன் பக்க நியாயங்களை எடுத்துரைத்திட முன்வரவில்லை.

**தன் கணவன் செத்துவிட்டான் மாது**
**தலையிற் கைம்மை எனலூர் - பெருந்**
**துன்பச் சுமைதனைத் விக்கிவைத்தார் பின்பு**
**துணைதேடவேண்டாம் என்றார்**

சமுதாயத்தில் இதுபோன்ற கட்டுப்பாடுகளை, சட்டதிட்டங்களை விதிப்பது யாராக இருந்திருக்க முடியும்? பெண்ணே இப்படி தனக்கான கொடுமைகளை விதித்துக் கொண்டனரா? அவ்வாறு இருந்திருக்க வாய்ப்பில்லை என்றுதான் கருதமுடிகிறது. தலைமைத்துவ நிலையில் இருந்துகொண்டு பொருளாதாரத்தைக் கையில் வைத்துள்ளவர் எவரோ, அவர்களே இவ்வாறான சமுதாய முறைமைகளையும் விதித்திருக்கமுடியும் என நம்ப வேண்டியுள்ளது.

**மாண்டவன் மாண்டபின்னர் - அவனின்**
**மனைவியின் உளத்தை**
**ஆண்டையர் காண்பதில்லை - ஐயகோ,**
**அடிமைப் பெண்கதியே**

என்று கணவன் போன பின்பு மனைவி என்பவள் அடிமையாக்கப்படுகிறாள். தீயசகுனம் உடையவளாகப் பார்க்கப்படுகிறாள். தரையில் படுத்தல் வேண்டும்; உணவு குறைத்தல் வேண்டும்; தாலியற்றவள் மேல் அழுத்திடும் அக்கிரமங்களை எல்லாம் இந்த உலகம் எப்படி பொறுத்திடும்? என்றும் குமுறுவதைப் பார்க்கமுடிகிறது. பெண் மறுமணம் செய்வது ‘சிறுமை’ என்று கூறுபவர் குறுகிய மதியுடையவர் ஆவர். கடும்பிணியாளன் இறந்துவிட்டால், கைம்பெண்ணாய் வருத்தப்பட வேண்டாம். அதற்குப் பதிலாக ஆசைக்கு உரியவனைத் தேடிமணம் செய்துகொண்டு மகிழ்வோடு வாழமுற்படு எனவும் பாதை காட்டுகிறார்.

**கற்கண்டு போன்றபெண் கணவனை இழந்தால்**
**கசந்தபெண் ஆவது விந்தைதான் புவிமேல்**
**சொற்கண்டு மலைக்காதே உன் பகுத்தறிவால்**
**துணைபிடிப்பாய் - பயம் விடுப்பாய்**

என்று பெண்ணின் வாழ்க்கைக்குப் புதிய வழி காட்டிச் செல்லுகிறார்.

பெண்களின் வாழ்க்கை முறையைப் பார்க்கிறபோது திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை என்பதுவேறு, திருமணத்திற்கு பின்பு வாழ்வது என வெவ்வேறாக உள்ளது. கணவனுடன் வாழ்வதுவேறு, அதே கணவன் இறந்தபிறகு வாழும் முறைவேறு. இப்படி முறைகளை மாற்றிமாற்றி வாழும் சூழல் பெண்களுக்குடையதாக இருக்கிறது. இக்கொடுமையைக் கவிஞர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

**எனை மணந்தார் இறந்தார் என் குற்றமல்ல**
**இறந்தவுடன் மங்கலநாண்,நல்லாடைகள்,**
**புனைமலர் குங்குமம் அணிகள் போனதுண்டு:**
**பொன்னுடலும் இன்னுயிரும் போனதுண்டோ?**

என்பதிலிருந்து கணவன் இறந்தபின்பு பெண்கள் வாழும் முறையினைக் காணமுடிகிறது. இன்றளவும் இக்கொடுமைக்கு முட்டுக்கட்டை போடப்பெற்றுள்ளதா? என்றால், முழுவதும் தீர்ந்துவிட்டது என்றுபதில் சொல்ல முடியவில்லையே? பெண்களை இவ்வாறு உருவாக்கியதில் இங்கு யாருக்கும் வெட்கமில்லை என்று சாடுகிறார். ஆகவே இந்நிலை மாறவேண்டும். புதிய சிந்தனை பிறந்திடவேண்டும். துணைவன் இறந்தபின் வேறுதுணை தேடச் சொல்லிடுவோம் என்று குறிப்பிடுவது, பாரதிதாசனிடம் காணப்படும் பெண் முன்னேற்றத்துக்கான முற்போக்குச் சிந்தனையாக உள்ளது.

**கைம்பெண் என் றெண்ணங் கொண்டே**
**கலங்கினாயோகற் கண்டே?**
**காடுவேகுவதைஒருமொழியினில்**
**மூடு போடமுடியுமோஉரையடி?**

என்று ‘கைம்மைநீக்கம்’ கவிதையில் பதிவுசெய்கிறார். மாற்றம் வருகிறபோது அவற்றை யாராலும் தடுத்திட இயலாது. கைம்மைக் கொடுமை என்பது பழங்காலத்திற்குரியது

இன்று இந்நிலை இக்காலத்திற்கு தேவையில்லாத ஒன்று என்று கருத முடியாது. எத்தனையோ நிலைகளில் முன்னேறியிருக்கிறோம். இன்னும் இதுபோன்ற சில துன்பக்கொடுமைகளை விட்டுக்கொடுக்காமல் இறுக்கிப் பிடித்து வைத்துள்ளோம். பெண்களில் பலரும் கல்வியில் முன்னேறியவர்களாக, பொருளாதாரத்தில் வளம் கண்டவர்களுமாக இருந்தும், தெளிவான முடிவெடுக்காமலும் அச்சப்படக் கூடியவர்களாகவுமே இருக்கின்றனர். 'குழந்தை வளர்ப்பு' என்பது முழுவதும் பெண்ணைச் சார்ந்தாக இருக்கும் மட்டும் இங்கு எதுவும் சாத்தியமில்லை. கைம்மைக் கொடுமைகள் மாறுவதற்கு ஆணுக்கும் சமூகத்துக்கும் அரசுக்கும் பொறுப்பு இருக்குமானால் ஒருவேளைசாத்தியப்படலாம்.

**கவிதைகளில் கண்ட உண்மைகள்**

பல நிலைகளில் பெண்கள் முன்னேறியுள்ளனர். குறிப்பாக இன்று கல்வி கற்றோர் எண்ணிக்கை கூடியுள்ளது. கல்வி என்ற சிறப்பினைப் பெற்றதால் பல தளங்களில் பணிசெய்கின்றனர். பொருளாதார நிலையிலும் ஓரளவுக்கு நிறைவடைந்துள்ளனர். கவிதைகளின் வழி கவிஞர் உணர்த்துவது யாதெனில்,

- பொருந்தாத மணம் தவிர்க்கப்பட வேண்டும்.
- கணவன் இறந்த பின் இருக்கும் கைம்மை நிலை மாற வேண்டும்.
- கைம்மை என்ற பெயரில் பழிகளைச் சுமத்தக் கூடாது.
- பெண்களின் உளக்கருத்தைப் புரிந்து நடத்த வேண்டும்.
- பெண்களும் சமுதாயத்தினர் பார்த்துக் கொள்வார்கள் என்றில்லாமல் பகுத்தறிவோடு செயல்படும் அறிவு பெற வேண்டும்.

**துணைநின்ற நூல்கள்**


1. பாரதிதாசன் கவிதைகள், பூம்புகார் பதிப்பகம், சென்னை-8
2. தந்தைபெரியார், பெண் ஏன் அடிமையானாள்? பெரியார் சுயமரியாதைப் பிரச்சாரக்கழகம், வேப்பேரி, சென்னை-17.
3. அஸ்வகோஷ், பெண்கள் சமூகம் மதிப்பீடுகள்.